சுருக்கம்

பகுதி II திட்டம் – 2013–2014 ஆம் நிதி ஆண்டு – நகர கூட்டுறவு வங்கிகளின் 1,000 பெண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் – மானியமாக ரூ.25,00,000/– வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2)துறை

அரசாணை (நிலை)எண்:–83

நாள்.30.05.2013
விஜய வருடம் வைகாசி
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.117, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 17.9.2012.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண்.33635/2013/ந.வ.2, நாள் 23.4.2013

----

ஆணை:–

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் நகரக் கூட்டுறவு வங்கிகளில் பெண் உறுப்பினர்கள் 1000 பேருக்கு தலா ரூ 500 /– வீதம் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு வட்டியில்லா பங்கு மூலதனக்கடனாக ஆண்டுதோறும் ரூ.5,00,000/– அரசால் அனுமதிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. மகளிர் உறுப்பினர்களுக்கு தேவைப்படும் கடன்களை நகர கூட்டுறவு வங்கிகளில் சிரமமின்றி பெற்றுக்கொள்ளவும், அவர்களின் கடன்பெறும் திறனை அதிகரிக்கவும், கூடுதல் பங்குத் தொகை செலுத்துவது அவசியமாகிறது என்பதால் நகர கூட்டுறவு வங்கிகளின் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் பங்கு மூலதனத்திற்கான வட்டியில்லாக் கடன் ரூ. 500/–க்கு பதிலாக தலா ரூ.2,500/–வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– வழங்குமாறு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாநிலத்தில் செயல்பட்டுவரும் 120 நகர கூட்டுறவு வங்கிகளால் அளிக்கப்படும் கடன் தொகை அளவு உறுப்பினர்கள் வங்கிகளில் செலுத்தும் பங்கு மூலதனத்தின் அடிப்படையில் அமையும் என்றாலும் தற்போது திட்டப் பணிகளின் மதிப்பு உயர்ந்துள்ளதால், சிறு தொழில் முதலீட்டுக் கடன்கள் மற்றும் பண்ணை சாரா

கடன்கள் தொடர்பான பணிகளின் மதிப்பீடும் அதிகரித்துள்ள நிலையில் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, கடன் பெறுவதை ஊக்குவிக்கவும், அவர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்கவும் கூடுதல் பங்குத் தொகை செலுத்துவது அவசியமாகிறது என்பதால் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/–த்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அதன்படி, நகர கூட்டுறவு வங்கிகளின் 1,000 மகளிர் உறுப்பினர்களுக்கு தலா ரூ.2,500/– வீதம் பங்கு மூலதனம் மானியமாக ரூ.25,00,000/– அளிக்க 2013–2014 ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூ.25,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி மானியத் தொகை ரூ.25,00,000/–த்தை ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:

நிபந்தனைகள்:–

1 இத்தொகை தொடர்புடைய நகர கூட்டுறவு வங்கிக்கு மட்டுமே நேரடியாக அளிக்கப்படும்.

2 அரசு அளிக்கும் பங்குத்தொகை மகளிர் உறுப்பினின் பங்கு மூலதன கணக்கில் வரவு வைக்கப்பட்டு அவர்கள் உறுப்பினராக தொடர்ந்து இருக்கும் வரையில் வங்கியில் இருந்து வரும்.

3 எந்த காரணத்தை முன்னிட்டும் பங்கு தொகை நேரடியாக உறுப்பினருக்கு வழங்கப்படமாட்டது.

4 மகளிர் உறுப்பினர், அவர்களின் தகுதியினை இழக்கும் பட்சத்தில் இந்த பங்கு மூலதன மானியத் தொகை, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறாத பிறிதொரு மகளிர் உறுப்பினரின் பங்கு மூலதன கணக்கிற்கு மாற்றப்படும்.

5 இத்திட்டத்தின் கீழ் ஒரு மகளிர் உறுப்பினருக்கு ஒருமுறை மட்டுமே பங்கு மூலதன உதவி அளிக்கப்படும்.

5.மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் செலவினம் மேற்கொள்ள வேண்டும்:–

2425–00–கூட்டுறவு – 107 கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – KF நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதனத்திற்கான நிதியுதவியை மானியமாக வழங்குதல் – 11 மானியங்கள் –02 பொதுவான மானியம் (த.தொ.கு.2425 00 107 KF 1122)

6. இம்மானியத் தொகை ரூ.25,00,000/–த்தை நகரகூட்டுறவு வங்கிகளுக்கு தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மூலம் வழங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் அவர்கள் பெற்று வழங்கிட அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது இத்தொகை, மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட பகுதி II திட்டத்தின் செலவினம் போக மீதித்தொகை இருப்பின், அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக சரண் செய்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 27071/நிதி(கூ.உ.ம நு. பா)/ 2013, நாள் 28.05.2013–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம், சென்னை–10
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–5
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநிலக் கணக்காயர் (துணிக்கை) சென்னை–18
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை–104
நிதித் (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை / பி.ஜி.II)துறை சென்னை–9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
✓இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்